[1993 மார்ச் 16

விவசாயிகள் வயிற்றில் பாலை வார்த்திருக்கின்ற இந்த நல்ல தருணத்தில் இந்தப் பகுதியினுடைய விவசாயிகள் குறைகளைப் போக்குகின்ற வகையில், வருகின்ற ஆண்டிலாவது 'பெட்-டாம்' கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் குடவாசல் தாலூக்கா, வட மட்டம் கிராம பாசன வசதிக்கு கீர்த்திமன்னாற்றின் குறுக்கே ஒரு 'பெட்-டாம்' கட்டும் வேலை குறித்து ஆய்வு செய்யும்போது வடமட்டம் வாய்க்கால் அருகே கீர்த்திமன்னாற்றின் படுகை மட்டம் தாழ்ந்து உள்ளதால் வாய்க்காலில் போதுமான தண்ணீர் செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்று அறியப்பட்டது. எனவே, இவ்விடத்தில் படுக்கை அணை கட்டுவதற்குப் பதிலாக தரைமட்டத்தைப் பராமரித்தால் போதுமானது என்று பொறியாளர்களால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான மதிப்பீடு தஞ்சை மாவட்டக் கண்காணிப்புப் பொறியாளரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு நிதி ஆண்டில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 91, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

91-

மதுரை பெரியார் பேருந்து நிலையம் மற்றும் அரசு இராஜாஜி மருத்துவமனை அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம்

* 9623-டாக்டர் **மு. காளிராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலும், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை அருகிலும் சுரங்கப்பாதை (நயுஸ-ஹிஹட்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 மார்ச் 16]

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலும், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை அருகிலும் மக்கள் நெருக்கடி அதிகமாக இருப்பதாலும், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாலும் அந்த இடத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த இடத்தில் சுரங்கப்பாதை அவசியமாகத் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு இல்லையென்றாலும், வரும் நிதியாண்டிலே அரசு மறுபரிசீலினை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி நிதிநிலைக்கேற்ப இது பற்றி பரிசீலினை செய்யப்படும்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக மேல் வழிப்பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலினை செய்வதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலும், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை அருகிலும் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஏற்கெனவே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுதான். அது உலக வங்கியின் மூலமாக செயலாக்கக்கூடிய சூழ்நிலையாக இருந்தது. இப்பொழுது அது இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். நிதியாதாரம் இல்லையென்றும் கூறுகின்றார்கள். அதை உலக வங்கியின் ஆதாரத்துடன் செயலாற்று வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகராட்சியிலே சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் வரி போன்ற வரிகளையெல்லாம் சீரமைத்து அந்த மாநகராட்சியின் நிதிநிலைமையை பெருக்குவதற்கான எல்லா

ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. நிதிநிலை, repaying capacity வருகிறபோது, இது பற்றி பரிசீலினை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, திரு. ஆர். டி. அரங்கநாதன்; திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

92-

வீட்டு உரிமையாளர் நகராட்சி வீட்டுவரி கட்டும் முறையை மாற்றியமைத்தல்.

9983–திரு. ஆர். டி. அரங்கநாதன்:***

திரு. அ. பாப்பா சுந்தரம்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

தற்போது நடைமுறையில் உள்ள நகராட்சி வீட்டுவரி கட்டும் முறையில் வங்கி மூலம் வீட்டு உரிமையாளர்கள் பணம் கட்டும் முறையை மாற்றி முன்போல் வரித்தண்டலர் மூலம் வசூல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது, வரி செலுத்துவோர் வங்கி மூலம் வரித்தொகையை செலுத்த விரும்பினால் கேட்பு அறிக்கையில் குறிப்பட்டுள்ள தொகையை வங்கியில் செலான் மூலம் செலுத்தலாம் எனவும், வரி செலுத்துபவர் வரித் தொகையை வருவாய் உதவியாளரிடம் அளிக்க விரும்பினால் வருவாய் உதவியாளர் அதனைப் பெற்றுக் கொண்டு அத்தொகை முழுவதையும் அன்று மாலை 5.00 மணிக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும் என்றும் அரசு கடிதம் (நிலை) எண். 219, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-8-92-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே இன்றைக்கு